கிழக்கில் பொலிஸார்; வடக்கே இராணுவம் நகர்வு

நல்லூர் கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

விலை ரூபா 5-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 36 திருவள்ளுவர் ஆண்டு 2025 பங்குனி 1 இதழ் 32
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 14-3-1994

(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாணம் வவுனியா ஆகிய பிரதேசங்களின் பாதுகாப்புப் பொறுப்பை பொலிசாரிடம் ஒப்படைப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக 'லங்காதீப' பத்திரிகை தெரிவித்துள்ளது.

'லங்காதீப' மேலும் குறிப்பிட்டிருப்பதாவது: தற்போது அரசாங்கத்தால் உருவாக்கப்பட்ட 10 படையணிகளும், கிழக்கில் தற்போது கடமையாற்றும் படையினரும் வடக்கில் இடம்பெறப் போகும் இராணுவ நடவடிக்கைக்கு நகர்த்தப்பட இருப்ப (4-ம்பக்கம் பார்க்க)

தமிழ் குடும்பஸ்தர் சுட்டுக் கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு பகுதியில் இராணுவத்தினரும் ரெலோ குழுவினரும் தமிழ் குடும்பஸ்தர் ஒருவரை சுட்டுக் கொலை செய்துள்ளனர்.

கொக்கட்டிச்சோலை இராணுவத்தினரும் ரெலோ குழுவினரும் சாதாரண உடையில் உழவு யந்திரத்தில் வந்த இரு பிள்ளைகளின் தந்தையான அரசடித்தீவு கொக்கட்டிச்சோலையைச் சேர்ந்த செல்லத்துரை கின்னவன் (வயது 24) என்பவரை சுட்டுக்கொன்றனர்.

மட்டு. மாவட்டத்தில் இராணுவத்தினரும் தேசவிரோதக் குழுக்களும் தமிழ் மக்களை அடிக்கடி துன்புறுத்தி வருவதும் அவர்களை கொலை செய்வதும் வழமையான செயலாகி விட்டது. (இ)

★ புலிகள் பக்கம் பந்தாம்!

சமாதானப் பேச்சு நடாத்த

பிரபாகரனே வரவேண்டும்

'இந்து'வுக்கு ரணில் பேட்டி

(சென்னை)

சமாதானப் பேச்சுவார்த்தைக்கு புலிகள் வருவதாக இருந்தால், அவ்வாறு வருகின்ற பிரதிநிதிகள் குழுவுக்கு திரு. பிரபாகரனே தலைமை தாங்க வேண்டும், அப்படி இல்லாதுவிடில் அவர்களுடன் பேசுவதில் அர்த்தமில்லை, என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா 'இந்து' பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்: பேச்சுவார்த்தை மூலம் சமாதானத்தை கொண்டு வருவதற்கான சாத்தியப்பாடுகளை கண்டறிய அரசாங்க சார்பற்ற நிறுவனங்கள் முயற்சிகளை மேற்கொண்டுவருகின்றன. ஜனாதிபதியாக திரு. பிரேமதாசா இருந்தபோது அவரை சந்தித்த அரசியல் கட்சித் தலைவர்கள் புலிகளுடனான எதிர்காலப் பேச்சுக்களுக்கான நிபந்தனைகளை முன்வைத்தனர். அவை இன்னமும் அப்படியே இருக்கின்றன.

பந்து இப்போது புலிகளின் பக்கமே இருக்கிறது. அரசியலமைப்பு சீர்திருத்தம் தொடர்பாக ஆராயும் நாடாளுமன்ற தெரிவுக் குழுவுக்கு புலிகளும் தமது யோசனைகளை முன்வைக்க (4ம் பக்கம் பார்க்க

வலி. வடக்குப் பகுதியில்

ஹெலி தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

வலி வடக்குப் பகுதியில் நேற்று நண்பகல் ஹெலிகொப்டர் ஒன்று 50 கலிபர் தாக்குதலை நடாத்தியது.

இதேவேளை பலாலி முகாமிலிருந்தும் 50 கலிபர் தாக்குதலும் பலத்த ஷெல் தாக்குதலும் நடாத்தப்பட்டது.

நேற்று நண்பகல் 12 மணியளவில் மண்டைதீவு படையினரும் கரையோரப் பகுதிகளை நோக்கி கலிபர் தாக்குதலை மேற்கொண்டனர். இ

ஈ. பி. டி. பி. அலுவலகத்தில்

குண்டு வெடிப்பு

(மட்டக்களப்பு)

கிழக்கில் மண்டூர் ஈ. பி. டி. பி. அலுவலகத்தில் கடந்த 7ம் திகதி இரவு 10 மணியளவில் குண்டொன்று வெடித்தது. இதில் பலர் காயமடைந்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

குண்டுவெடிப்பை அடுத்து மறுநாள் காலை வெல்லாவெளி, அன்னமடு, 13ம் கிராமம் ஆகிய விசேட அதிரடிப் படை முகாம்களில் (4-ம் பக்கம் பார்க்க)

தேசத்துரோகிக்கு மரண தண்டனை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு பகுதியில் தேசத் துரோகி ஒருவருக்கு விடுதலைப் புலிகள் மரணதண்டனை வழங்கியுள்ளனர்.

உன்னிச்சை முகாமில் இருந்து காட்டிக் கொடுத்த (4ம் பக்கம் பார்க்க)

கச்சதீவை மீளப் பெறவேண்டும்

(சென்னை)

கச்சதீவு தொடர்பாக 1974ம் ஆண்டு செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தத்தை செயற்படுத்த இலங்கை மறுக்குமானால் இந்திய மீனவர்களின் நலன்களையும், உயிரையும் காப்பாற்ற கச்சதீவை இந்தியா மீளப் பெற (4-ம் பக்கம் பார்க்க)

சுவீடனில் தஞ்சம் மறுக்கப்பட்ட

தமிழ் இளைஞர் தீக்குளிப்பு

(லண்டன்)

சுவீடனில் அரசியல் தஞ்சம் கோரிய இலங்கை தமிழ் இளைஞர் ஒருவர் தமது கோரிக்கை நிராகரிக்கப்பட்ட நிலையில் தனக்குத் தானே தீமூட்டி தற்கொலை செய்ய முயன்றுள்ளார்.

முல்லைத்தீவை சேர்ந்த சிவவீரசிங்கம் (வயது 30) என்னும் இளைஞர் மிகவும் ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் இவர் இன்னும் ஆபத்தான கட்டத்தை தாண்டவில்லையென்றும் அறியப்படுகிறது.

மேற்படி இளைஞருக்கு இன்று 14ம் திகதிவரை மட்டுமே சுவீடனில் தங்கியிருக்க சுவிடிஷ் அரசு அனுமதி வழங்கியிருந்ததாகவும் அதன்பின் அவர் (4ம் பக்கம் பார்க்க)

திரும்பி வருவதைவிட தீக்குளிப்பது மேல்

(லண்டன்)

இலங்கைக்கு பலவந்தமாக திருப்பி அனுப்பப்படுவதை விட தீக்கிரையாகி சாவது மரணிப்பதை இலங்கை தமிழரான சிவவீரசிங்கம் விரும்பியது, கொழும்பிலும் இலங்கையின் ஏனைய பகுதிகளிலும் யதார்த்த நிலையை புலப்படுத்துவதாக உள்ளதாக 'தமிழர்களின் சர்வதேச கூட் 4-ம் பக்கம் பார்க்க)

தமிழர் நிலை பற்றி ஆராய

சுவிஸ் குழு இலங்கை வருகிறது

(கொழும்பு)

இலங்கைத் தமிழ் அகதிகளை திருப்பி அனுப்புவது தொடர்பாக ஆராய்வதற்காக சுவிஸ் அகதிகள் உதவி நிறுவனங்களின் இணைப்பு தனது பிரதிநிதிகளை இலங்கைக்கு அனுப்பவுள்ளது.

இலங்கையின் தற்போதைய நிலைமை இக்குழு விரிவாக ஆராயும். அரசியல் நிலைமைகளையும் ஆராயும் இக்குழு அகதிகளை திருப்பி அனுப்பும் விடயம் குறித்தும் பல்வேறு தரப்பினரையும் சந்திக்கவுள்ளனர்.

சுவிஸில் அடைக்கலம் தேடிச் சென்ற சுமார் 30,000 இலங்கைத் தமிழர்களை மீண்டும் இலங்கைக்கு திருப்பி அனுப்ப சுவிஸ் அரசு முடிவு செய்துள்ளதும் இதற்கு கடும் எதிர்ப்பு கிளம்பியுள்ளதும் தெரிந்ததே. இ

சர்வஜன வாக்கெடுப்பு;

தீர்மானம் இல்லை

(சென்னை)

வடக்கும் — கிழக்கும் தொடர்ந்தும் இணைந்திருக்க வேண்டுமா? இல்லையா? என்பது குறித்து தீர்மானிப்பதற்காக கிழக்கில் சர்வஜன வாக்கெடுப்பு நடாத்துவதற்கான எந்தவொரு தீர்மானத்தையும் அரசு இதுவரை மேற்கொள்ளவில்லை.

இவ்வாறு பிரதமர் ரணில் (4ம் பக்கம் பார்க்க)

வரிவிளம்பரம்

செல்வம் ஆட்ஸ்

ரபர் சீல் வேலை செய்யத் தெரிந்தவர்களும், பழக ஆர்வமுள்ளவர்களும் நேரில் வரவும். செல்வம் ஆட்ஸ், காங்கேசன்துறை வீதி, சுன்னாகம். (கி-862)

O/L கணிதம் 1994

Distinction, Credit பெறுபேறடைய ஆண்டு 9, 10 உட்பட 30 வருட அனுபவமுள்ள B Sc ஆசிரியரால் கற்பிக்கப்படும். 85, சிவன் கோவிலடி, திருநெல்வேலி. (கி-881)

டில்கா வாச் அன் றேடியோ வேக்ஸ்

சகல மணிக்கூடுகள், றேடியோக்கள் உத்தரவாதத்துடன் திருத்திக்கொள்ள எம்மை நாடுங்கள். உதிரிப் பாகங்களுக்காக நல்ல நிலையில் உள்ள மணிக்கூடுகள் வாங்கப்படும். டில்கா வாச் அன் றேடியோ வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (வாணி கூல்பார் அருகில்) கிளை; கண்டி வீதி, சாவகச்சேரி. (ஏ-3875)

தவறிவிட்டது

சனிக்கிழமை காலை யாழ்—பருத்தித்துறை வீதியில் நீர்வேலி வாய்க்கால் தரவை பிள்ளையார் கோவிலுக்கு அண்மையில் பெறுமதி மிக்க நகைகள் தவறிவிட்டன. கண்டெடுத்து தருபவர்களுக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும். துரைராசா முரளி. நீர்வேலி தெற்கு முகவரியில் தொடர்பு கொள்ளவும். (ஏ-3896)

இரவு நேர வகுப்புகள்

(அச்சுவேலி)

அச்சுவேலி மகாவித்தியாலயத்தில் இரவு நேர வகுப்புகள் நடைபெறுகின்றன.

தமிழீழ மாணவர் அமைப்பு, பழைய மாணவர்கள் ஆகியோரின் ஒத்துழைப்புடன் நடைபெறும் இரவு நேர வகுப்புகளில் க. பொ. த. சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றவிருக்கும் மாணவர்கள் பயனடைந்து வருகின்றனர். —கி

புலமைப் பரிசில் வழங்க முடிவு

(உடுவில்)

மானிப்பாய் மறுமலர்ச்சிக் கழகத்தினரால் இவ்வருடம் தொடக்கம் யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தில் நாடகத்துறை பயிலும் மாணவர்களில் இருந்து தெரிந்தெடுக்கப்படும் மாணவர் ஒருவருக்கு புலமைப்பரிசில் வழங்கி ஊக்குவிப்பு வழங்குவது என தீர்மானிக்கப்பட்டுள்ளது. -109

பீரங்கிப் படகு நடமாட்டம்

(தாளையடி)

வடமராட்சி கிழக்கு கடற்பிரதேசத்தில் கடந்த இரண்டு நாட்களாக இரவு பகல் வேளைகளில் கடற்படை பீரங்கிப் படகுகளின் ரோந்து நடவடிக்கைகள் அதிகரித்துக் காணப்படுகின்றன. 139

பொது அறிவு போட்டி முடிவுகள்

(ஆனைப்பந்தி)

பேராசிரியர் லூதர் ஜெயசிங்கம் ஞாபகார்த்தமாக றோட்டரிக் கழகத்தினரால் அண்மையில் நடாத்தப்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான பொது அறிவுப் போட்டியில் வேலணைக் கோட்ட மட்டத்தில் புங்குடுதீவு மகாவித்தியாலயம் 1-ம் இடத்தைப் பெற்றுள்ளது. 2-ம் இடத்தை மண்டைதீவு மகாவித்தியாலயமும் 3-ம் இடத்தை வேலணை சேர்.வைத்திலிங்கம் துரைச்சாமி வித்தியாலயமும் பெற்றுள்ளன. (191)

பயிற்சியும் இலட்சிய உறுதியும் வெற்றிகளைப் பெற்றுத்தரும்

அருண்மாஸ்டர் உரை

(அச்சுவேலி)

"உடற்பயிற்சி மூலம் பெறும் உடல் உள வளர்ச்சியும், உறுதிப்பாடும் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு உறுதுணையாக அமையும். பாடசாலைகளின் கல்விச் செயற்பாட்டில் உடற்பயிற்சிகளுக்கு உரிய இடம் அளிக்கப்பட வேண்டும்"

இவ்வாறு தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவை பிரமுகர் திரு. க. அருண்மாஸ்டர் தெரிவித்தார்.

புத்தூர் ஸ்ரீசோமஸ்கந்தக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற கோப்பாய் கோட்ட பாடசாலைகளின் உடற்பயிற்சிப் போட்டிகளில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு திரு. அருண்மாஸ்டர் தொடர்ந்து உரையாற்றும் போது "தமிழீழத்தில் கல்வித் தரம் அண்மைக் காலத்தில் வீழ்ச்சியடைந்துள்ளது. இதற்குரிய பல்வேறு காரணங்களில் அண்மைக் காலங்களில் மாணவர்களின் உடற்பயிற்சியில் பாடசாலைகள் அக்கறை செலுத்தாத நிலையும் ஒன்றாகவுள்ளது.

கடும் பயிற்சியும் இலட்சிய உறுதியும் நிச்சயம் வெற்றிகளைப் பெற்றுத் தரும். இதற்கு எடுத்துக்காட்டாக தமிழீழ விடுதலைப் புலிகள் விளங்குகின்றார்கள். தோல்விகளில் பெற்ற படிப்பினைகளைக் கொண்டு வெற்றிகளைப் பெறுகின்றோம்.

மாணவர்களில் 20 வீதமானவர்கள்தான் உடற்பயிற்சிகளில் அக்கறை செலுத்துகின்றனர், ஈடுபடுத்தப்படுகின்றனர். அவர்கள் கல்விப் பெறுபேறுகளிலும் உயர் பேறுகளைப் பெறுகின்றனர்" எனக் கூறினார்.

யாழ். வடக்கு வலயக் கல்விப்பணிப்பாளர் க. கந்தசாமி வெற்றிபெற்ற அணிகளுக்குரிய பரிசில்களை வழங்கினார். -74-வி

"படிக்கும் மன உறுதியை விளையாட்டு தருகிறது"

(உடுவில்)

"விளையாட்டுப்போட்டிகள் மாணவரிடையே மட்டுமல்லாமல் பார்வையாளர்களிடையேயும் உற்சாகத்தை ஏற்படுத்துகின்றன" என்று யாழ். பல்கலைக்கழக பதிவாளர் திரு கே. பரமேஸ்வரன் மானிப்பாய் மகளிர் கல்லூரி விளையாட்டுப் போட்டியில் கலந்து கொண்டு உரையாற்றும்போது இவ்வாறு கூறினார்.

அதிபர் திரு வி. பசுபதிப்பிள்ளை தலைமையில் போட்டிகள் நடைபெற்றன.

விளையாட்டுக்கள் மூலம் மாணவர்களிடையே ஒரு நெருக்கத்தை, அன்பை உடல் வலுவை ஏற்படுத்த முடியும். படிக்க வேண்டும் என்ற மன உறுதி, பலம், மனப்பாங்கை விளையாட்டுகள் தருகின்றன. விளையாட்டுக்களில் சிறந்து விளங்கும் ஒருவர் கல்வியிலும் சிறந்து விளங்குவார் எனவும் திரு. பரமேஸ்வரன் மேலும் கூறினார்.

திருமதி பரமேஸ்வரன் போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவிகளுக்கான பரிசில்களை வழங்கினார். -109

மேய்ப்புப் பணி மாநாடு:

இடம்பெயர்ந்தோர் நலன் பேணப்படவேண்டும்

(யாழ்ப்பாணம்)

"தமது சொந்தப் பிரதேசங்களை விட்டு இடம்பெயர்ந்த மக்களின் தனித்துவம் மதிக்கப்பட்டு அவர்களது நலன்கள் பேணப்பட வேண்டும்" இவ்வாறு யாழ். நகரில் நடைபெறும் கத்தோலிக்க திருச்சபையின் மேய்ப்புப்பணி மாநாட்டின் 4ம் நாள் நிகழ்வில் வலியுறுத்தப்பட்டது.

இடம்பெயர்ந்த மக்களுக்கென ஒரு தொடர்புப்பணி நிலையமும், அவர்களின் நலன்களைக் கவனிப்பதற்கு விசேடமாக ஒரு குருவானவரையும் ஆயர் அவர்கள் நியமிக்க வேண்டும் என்றும் மேற்படி மாநாட்டில் மேலும் வலியுறுத்தப்பட்டது. -வி-இ

புலிகள் தலைவரின் அழைப்பு நிராகரிக்கப்படவில்லை

(லண்டன்)

சமாதான வழியில் தீர்வு காண்பதற்கு தாம் தயார் என விடுதலைப்புலிகள் தலைவர் திரு. வே. பிரபாகரன், சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு வெளியிட்ட கருத்தில், தென் இலங்கை அரசியல் அவதானிகள் நம்பிக்கை கொள்ளாத போதும், அந்த வேண்டுகோளை முழுமையாக நிராகரிக்க வில்லை.

இவ்வாறு பிரபல பத்திரிகையாளர் லூசியன் ராஜகருணாநாயக்க வெளிநாட்டு வானொலியொன்றிற்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது.

1990 ஆம் ஆண்டு மீண்டும் தொடங்கிய போரின் பின் இதுவே திரு பிரபாகரனால் அறிவிக்கப்பட்ட முதலாவது சமாதான அழைப்பாக கருதப்படுகிறது.

இந்த சிறந்த வழியை அரசு பயன்படுத்தி சமாதான பேச்சுக்கான ஆக்கபூர்வமான முறையில் இறங்க வேண்டும் என்றும் அப்பேட்டியில் தெரிவித்துள்ளார். (வே.-கி

● உள்ளூராட்சி

தேர்தலில் தெரிவான உறுப்பினர்களுக்கு பாதுகாப்பு

(கொழும்பு)

உள்ளூராட்சிசபைத் தேர்தலில் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களுக்கு பலத்த பாதுகாப்பு வழங்குவதற்கு பாதுகாப்பமைச்சு நடவடிக்கை எடுத்து வருகின்றது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தெரிவு செய்த உறுப்பினர்களும் தமக்கு உடனடியாக பாதுகாப்பு வழங்குமாறும், தாங்கள் விடுதலைப் புலிகளால் கொலை செய்யப்படலாம் என்றும் அஞ்சுவதாகவும் தெரிவித்துள்ளனர்.

இதன்பிரகாரம் மட்டக்களப்பு மாநகரசபையில் போட்டியிட்ட 91 பேருக்கும் வவுனியா நகர சபையில் போட்டியிட்ட 11 பேருக்கும் திருகோணமலையில் போட்டியிட்ட 115 பேருக்கும் பாதுகாப்பு வழங்கவிருப்பதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. ம-கி

நோயாளர் பராமரிப்பு பயிற்சி நெறி

(கொழும்புத்துறை)

யாழ்ப்பாணம் மாவட்ட சாரணர் சங்கம் விசேட முதலுதவிப்பயிற்சியும், நோயாளர் பராமரிப்பு பயிற்சி நெறியையும் நடாத்தவுள்ளது.

இலவசமாக இடம் பெறும் இப்பயிற்சி நெறியில் பங்குபற்ற விரும்பும் மக்கள் யாவரும் தத்தமது விண்ணப்பங்களைத் திரு. இ.மகேந்திரன் (மாவட்ட ஆணையாளர்) அதிபர் கொக்குவில் இந்துக்கல்லூரி கொக்குவில் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (154)

சைக்கிள் திருட்டு

(ஆனைப்பந்தி

புங்குடுதீவு நயினாதீவு பலநோக்கு கூட்டுறவுச்சங்க ஊழியரான ந. சிவயோகபதி என்பவருடைய 'ஏசியா' சைக்கிள் அண்மையில் யாழ். நகரில் பூட்டியிருந்த நிலையில் திருடப்பட்டுள்ளது.

இலக்கிய சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி பகுதியிலுள்ள இலக்கிய ஆர்வலர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 19-ந் திகதி பிற்பகல் 3 மணியளவில் அறவழிப் போராட்டக் குழுவினால் நடாத்தப்படவுள்ளது.

அறவழி செயலாளர் திரு. ச. ஜீவகதாஸ் தலைமையில் நடைபெறும் இக்கலந்துரையாடல் கைதடி — நுணாவிலுள்ள அறவழி பணியகத்தில் நடைபெறவுள்ளது. —கி

பகவான்

ஆங்கில மருத்துவசேவை

14-3-94 முதல் 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம், (டாக்டர் சண்முகலிங்கம் வீட்டிற்குசற்று முன்பாக) என்ற முகவரியில் மேற்படி சேவை இருநேரமும் இயங்கவுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

நிர்வாகம்,
பகவான் மருந்தகம்
221, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்

(ஏ-8894)

கணக்கியல்/கணக்காய்வுப் பயிற்சி நெறி

தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதித்துறை கணக்கியல் மற்றும் கணக்காய்வு தொடர்பான பயிற்சி நெறியொன்றை நடாத்தவுள்ளது. இப்பயிற்சி நெறிக்கு க. பொ. த. உயர்தர வர்த்தகப்பிரிவில் சித்தியடைந்த ஆண் / பெண் இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தகுதியானவர்கள் தங்களால் தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்துடனும், சான்றிதழ்களுடனும் 16-03-1994 காலை 9-00 மணிக்கு கீழே தரப்பட்டுள்ள முகவரிக்கு வருகைதரவும்.

குறிப்பு:-

பயிற்சி நெறிக்கான செலவு முழுவதும் எம்மால் ஈடுசெய்யப்படும். வேறு கற்கை நெறியில் கற்றுக்கொண்டு இருப்பவர்களுக்கு இடமளிக்கப்பட மாட்டாது.

வருகைதர வேண்டிய முகவரி:

யாழ்.மாவட்டவருவாய்ப்பகுதிச்செயலகம்,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

(கி-3898)

யாழ்ப்பாணம்

மணிவாக்கு

நான் மகிழ்ச்சியோடு இருக்கிறேன்; ஏனெனில் நான் யாரிடமும் எதையும் எதிர்பார்ப்பதில்லை.

— அல்பர்ட் ஐன்ஸ்டீன்

இல. நெல் உற்பத்தி வருடா வருடம் பெரும் வீழ்ச்சியடைந்து வருகிறது!

(கொழும்பு)

கடந்த வருடங்களில் இலங்கைத் தீவில் நெல்உற்பத்தி வீழ்ச்சியடைந்துள்ளது. வருடா வருடம் இவ்வாறு வீழ்ச்சி ஏற்பட்டு வருகிறது.

1985 இல் மிகக்கூடிய நெல் உற்பத்தியை இலங்கை பெற்றது. அதன் பின்னர் நெல் உற்பத்தி வீழ்ச்சியடைந்து வருகின்றது. இதற்கு தென் பகுதியில் இடம்பெற்ற ஜே. வி. பி கிளர்ச்சிகளும், வடக்கு கிழக்கில் இடம்பெற்றுவரும் யுத்தமுமே காரணம் எனவும் காலநிலையை காரணம் காட்டி அரச தரப்பில் கூறப்படுவது ஏற்கக்கூடியதல்ல என சிறிபாத கல்வியியல் கல்லூரி விரிவுரையாளர் ஒருவர் கூறியுள்ளார்.

இலங்கைத் தீவில் அதிக நெல்லினையும் அம்பாறை, மட்டக்களப்பு, பிரதேசங்கள் இராணுவ ஆக்கிரமிப்பு காரணமாக பெருமளவில் நெற்செய்கைக்கு உட்படுத்தப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. -நி

நமது நோக்கு

அந்தத் தீர்ப்பு!

ஆசி தலரத்தின ஒரு முதிய அரச சட்டத்தரணி. அவரது நான்கு வயது மகளுக்குச் சுகவீனம். மருத்துவமனைக்கு அனுமதிக்கப்பட்டார். பிரபலமான, நீண்டகால அனுபவமுள்ள மருத்துவர் கவனித்தும் குழந்தை இறந்துவிட்டது.

மருத்துவரின் கவனயீனத்தால்தான் குழந்தை இறந்துவிட்டது என வழக்குத் தொடரப்பட்டது. பல லட்ச ரூபா நஷ்டஈடு வழங்கும்படி கொழும்பு மாவட்ட நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

இந்தத் தீர்ப்பு நீதித்துறை வரலாற்றிலே முக்கியத்துவம்வாய்ந்தது. பொதுவாகவே, கவனயீனமான அரச ஊழியர்களுக்கு இது ஒரு அதிர்ச்சி வைத்தியமா?

இலங்கையில் மருத்துவர் பற்றாக்குறை உண்டு. 6162 பேருக்கு ஒரு மருத்துவர் என்ற நிலை இங்கு. ஆனால் இந்த விகிதம் மேலை நாடுகளில் எவ்வளவு? இத்தாலியில் 210க்கு ஒரு மருத்துவர். ஜேர்மனியில் 330க்கு ஒருவர்.

பிரித்தானியாவில் ஒரு மருத்துவர் தினசரி சராசரி 10 நோயாளிகளையே கவனிப்பார். இங்கு தினசரி 150 நோயாளிகளைக் கவனிக்கவேண்டிய நிலை.

வேலைப் பளு என்பதால் கவனயீனம் மன்னிக்கக் கூடியதா?

சில அரச ஊழியர்களின் கவனயீனத்தால் மக்கள் படும் வேதனைகளை யாரிடம் சொல்லி அழ என ஏங்கியிருப்போருக்கு இத்தீர்ப்பு ஒரு வரப்பிரசாதமா?

கொழும்புப் பத்திரிகை ஒன்று நகைச்சுவையோடும் கற்பனையோடும் இத்தீர்ப்புப்பற்றி விமர்சனம் எழுதியது. கவனயீனம் பற்றிய வழக்குகள் நீதிமன்றங்களுக்கு வந்து குவியுமா எனக் கேள்வி எழுப்பியது.

மருத்துவராக வரவேண்டிய மாணவன், ஆசிரியரின் கவனயீனத்தால் குறைந்த புள்ளிகள் பெற்று அனுமதி இழக்க நேர்ந்தது என்ற வழக்கு வந்தால், வாதப்பிரதிவாதங்கள் எப்படி இருக்கும்?

மருத்துவராக வேண்டிய பிராப்தம் நிறைய உண்டு என்ற சோதிடரின் சாட்சியம் நீதிமன்றம் ஏறாது என்பது என்ன நிச்சயம்?

சோதிடரின் கவனயீனத்தால், கணிப்புத் தவறு என்று சாட்சி மீதே எதிர் வழக்கு வராது என்பதும் என்ன நிச்சயம்?

எது எவ்வாறாயினும், அரசஊழியர்களின் கவனயீனம் நீதிமன்றத்தின் கவனத்திற்கு வந்துள்ளது.

அரச ஊழியர் தவறுகளைக் கவனிக்க ஏனைய நாடுகளில் இருப்பது போல இங்கும் 'ஓம்பட்சன்' (Ombudsen) ஒழுங்கு முறை உண்டு.

நீதிமன்றத் தீர்ப்பால் விழிப்புற்ற பொதுமக்கள், அந்நிறுவனத் தலையீட்டைக் கேட்கப் புத்துணர்வு பெறுவார்கள் என நம்புவோம்!

படையினரின் தாக்குதல்கள் யாழ். குடாவில் தொடர்கிறது!

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டின் பல பகுதிகளிலும் தினமும் சிறிலங்கா படையினரின் தாக்குதல்களும் விமானப்படையினரின் நோட்டமிடுதலும் இடம்பெற்று வருகின்றன.

நேற்றுமுன்தினம் இரவும் ஹெலிகொப்டர் ஒன்று வலிகாமம் கிழக்குப் பகுதியை வட்டமிட்டு ஐம்பது கலிபர் தாக்குதலை மேற்கொண்டது. இப்பகுதியை நோக்கி பலாலி இராணுவ முகாமிலிருந்து அடிக்கடி ஷெல் தாக்குதல்களும், துப்பாக்கிப் பிரயோகமும் நடாத்தப்படுகிறது.

இதேவேளை இரவு பகலாக கடந்த சில தினங்களாக பலாலி முகாமிற்கான விமானப் போக்குவரத்தும் அதிகரித்துக் காணப்படுகிறது. -நி

மீளாய்வு

(நெல்லியடி)

பருத்தித்துறை பிரதேச செயலகத்திற்குட்பட்ட பகுதிகளில் அரசினரின் பொதுசன மாதாந்த உதவிப்பணம் பெறுபவர்களின் தகைமைகள் தன்மையில் மீளாய்வு செய்யப்பட்டுள்ளன.

மீளாய்வு செய்யப்படாதவர்களுக்கு இவ் உதவிப்பணம் வழங்கப்படமாட்டாதென பருத்தித்துறை பிரதேச செயலக சமூகசேவை உத்தியோகத்தர் திரு. எஸ். இராசலிங்கம் தெரிவித்துள்ளார். (160)

இராசி பலன்

14 - 03 - 1994

திங்கட்கிழமை

(தமிழுக்கு மாசி 01)

திதி: பிற்பகல் 4-47 வரை, ரேவதி: பின்னிரவு 4-50 வரை, சித்தயோகம், இராகுகாலம்: காலை 7-52 முதல் 9-22 வரை. சுபநேரம்: நண்பகல் 12-22 முதல் 1-52 வரை.

மேஷம்: பிறர் கண்டனம், பழைய பிரச்சினை, மனச்சஞ்சலம்.

இடபம்: அதிக வசதி, விருந்து உண்ணல், நீண்ட சம்பாஷணை

மிதுனம்: புதிய பதவி, கடன் வசூல், வாக்கு வசீகரம்.

கடகம்: தொழில் தகராறு, பணமுடை, மனமுறிவு.

சிம்மம்: உறவில் விரிசல், இடமாற்றம், கோபவார்த்தை.

கன்னி: எண்ணங்கள் கைகூடல், சுபகனவு, மங்கையர் உதவி.

துலாம்: கைப்பொருள் செலவு, மாமனார் புதிர், வைராக்கியம்

விருச்சிகம்: குடும்ப பிரிவு, பணியாள் துன்பம், மனச்சோர்வு.

தனுசு: வழியில் தகராறு, பொதுப் பணி, கெட்ட வார்த்தை.

மகரம்: காரிய சித்தி, கல்வியில் சிறப்பு, நண்பர் உதவி.

கும்பம்: [illegible] பாடு, பதவி மாற்றம், வைத்திய செலவு.

மீனம்: மாமியார் பணிவுடை, அதிகாரிகள் ஆதரவு, நீதியான முடிவு.

— ஜோஸ்யர்.

இன்று

(யாழ்ப்பாணம்)

ஆனைக்கோட்டை றோ. க. த. க. பாடசாலை வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு ஆனைக்கோட்டை யூனியன் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் அதிபர் திருமதி ச. சோமலிங்கம் தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக யாழ். வடக்கு கல்வி வலயப் பணிப்பாளர் திரு. க. கந்தசாமி கலந்து கொள்வார். -கே

0 0

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இளையதம்பி இந்து வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் 2-00 மணியளவில் யாழ் இந்துக் கல்லூரி மைதானத்தில் அதிபர் திரு. மு. செல்லையா தலைமையில் நடைபெறவுள்ளது. -நி

0 0

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட சனசமூக நிலையங்களின் சம்மேளன உறுப்பினர்களுக்கான விசேட கலந்துரையாடல் இன்று உ. உ. ஆணையாளர் திரு. சுந்தரம் டிவகலாலா தலைமையில் மேற்படி அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. -நி

0 0

(கொழும்புத்துறை)

யாழ்ப்பாணம் மாவட்ட கணித, விஞ்ஞான மூலவள நிலையத்தின் நடமாடும்சேவை நிகழ்வு ஒன்று இன்று திங்கட்கிழமை சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரியில் உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம் தலைமையில் இடம்பெறும். -154

0 0

(ஆனைப்பந்தி)

வேலணை, ஊர்காவற்றுறைப் பாடசாலைகளுக்கிடையிலான கணித, விஞ்ஞான பொது அறிவுப் போட்டி இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

0 -101

(நெல்லியடி)

புலோலி கிழக்கு சத்தா கோவிலடி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று 14-ம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு அதிபர் திரு. ஆ. மகேசு தலைமையில் நடைபெறவுள்ளது.

0 -110

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சரின் 159-வது ஜெயந்தி விழா இன்று திங்கட்கிழமை திருநெல்வேலி இராமகிருஷ்ணாலயத்தில் வெகு சிறப்பாக கொண்டாடப்படவுள்ளது. இன்று அதிகாலை மங்கல ஆரத்தியுடன் ஆரம்பமாகும் இவ்விழாவில் விசேட பூசை ஆராதனைகளுடன் பஜனையும் இடம் பெறும்.

மாலை நிகழ்ச்சிகள் பி. ப. 3-30 மணிக்கு ஆரம்பமாகும். நுண்கலைக் கோயில் மாணவிகள் வழங்கும் "ஸ்ரீராமகிருஷ்ணர் சரிதம்" உரைச் சித்திரமும் ஸ்ரீ இராமகிருஷ்ண தேவரின் அமுத மொழிகளும், இயக்குநர் திரு. இ. ராஜமகேந்திரலிங்கம் வழங்கும் சிறப்புச் சொற்பொழிவும் இடம்பெறும். -நி

மாணவரமைப்பின் அறிவியல் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பின் மாணவர் அறிவியல் கழகம் நடாத்தும் அறிவியல் கருத்தரங்கு தொடர்-01 நாளை மறுதினம் மாலை 4 மணியளவில் அறிவியல் சமூக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

'அறிவியல் பாடங்களைக் கற்பதில் தமிழீழ மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளும், தாண்ட வேண்டிய தடைகளும்' என்னும் தலைப்பில் யாழ். பல்கலைக்கழகப் பொருளியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. ப. சிவநாதன் இந்நிகழ்வில் கருத்துரை வழங்குவார்.

இதேவேளை மாணவர் அறிவியல் கழகத்தின் பொது நூலகம் தனது செயற்பாடுகளை ஆரம்பித்துள்ளதுடன் நூல் இரவல் வழங்கும் பகுதி தனது முழுமையான செயற்பாட்டை இன்று திங்கட்கிழமையிலிருந்து ஆரம்பிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. -நி

ஹெல்வெற்றுஸ் பிரதிநிதிகள் வடபகுதிக்கு விஜயம்

(யாழ்ப்பாணம்)

ஹெல்வெற்றுஸ் என்னும் சுவிஸ் அபிவிருத்தி நிறுவனத்தைச் சேர்ந்த மூன்று உயர்மட்ட அதிகாரிகள் யாழ். மாவட்ட நிலைமையை நேரில் பார்வையிடுவதற்கு எதிர்வரும் 19 ம் திகதி யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளனர். ஹெல்வெற்றுஸ் நிறுவன இலங்கை வதிவிடப் பிரதிநிதி திரு. ஒற்றோ கூடெக்ஸ் ஆசியப்பிராந்திய பிரதிநிதி திருமதி அஞ்ஸ்ருன்ஸ், திட்ட உதவியாளர் எம். மௌரூப் ஆகியோரே யாழ். விஜயம் செய்யவுள்ளனர்.

யாழ் மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் அழைப்பின் பேரில் யாழ். வரும் இவர்கள் அரச சார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகளையும் அவதானிக்கவுள்ளனர். -நி

மட்டு. படுவான்கரை போக்குவரத்து துண்டிப்பு

(மட்டுநகர்)

மட்டு. மாவட்டத்தின் படுவான்கரைப்பிரதேசம் ஏனைய பகுதிகளுடனான போக்குவரத்து துண்டிக்கப்பட்ட பகுதியாகவே காணப்படுகின்றது.

படுவான்கரைப் பிரதேச மக்கள் வேறு பகுதிகளுக்குச் செல்வதற்கு எதுவித போக்குவரத்து வசதிகளும் இல்லை, இதனால் தமது அன்றாட தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கு மிகவும் கஷ்டப்படுகின்றனர்.

ஏனைய பகுதிகளுக்குச் செல்வதற்கு நீண்ட தூரம் மக்கள் கால்நடையாகவும், துவிச்சக்கரவண்டிகளின் மூலமுமே செல்கின்றனர். மக்கள் சகல தேவைகளுக்கும் வெகுதூரமே செல்ல வேண்டிய நிலைமை அங்கு ஏற்பட்டுள்ளது. (நி)

தவக்கால நற்சிந்தனை

"தீமையையல்ல நன்மையைத் தேடுங்கள்; அப்பொழுது நீங்கள் வாழ்வீர்கள்; ஆண்டவரும் உங்களோடு இருப்பார்"

(ஆமோஸ் 5:14)

"நன்றே செய்யுங்கள், அதனை இன்றே செய்யுங்கள்' என்பது நாம் அறிந்த மொழி. இறைவனின் கூற்று 'தீமையை விலக்கி நன்மையை நாடுங்கள்'' என்பதே ''நற்கனி கொடாத மரங்கள் எல்லாம் வெட்டுண்டு அக்கினியில் போடப்படும்'' என்கிறார். எமது நிலையை நோக்குவோம்.

-மோ. தூ.

வனமின்றிப்போனால் - நம்
இனமின்றிப் போகும்

தேர்தல் பிரசாரத்திற்கு செல்ல காமினி பொன்சேகா மறுப்பு

ஐ. தே. க.வுக்கு பெரும் அதிர்ச்சி

(கொழும்பு)

நடைபெறவிருக்கும் தென் மாகாண சபை தேர்தல் பிரசார கூட்டங்களில் கலந்து கொள்ள உப - சபாநாயகர் காமினி பொன்சேகா மறுத்துள்ளார்.

ஐக்கிய தேசிய கட்சியும் மக்கள் முன்னணியும் தங்கள் முழுப்பலத்தையும் பிரயோகித்து தென்மாகாணத்தில் பிரசாரங்களில் ஈடுபட்டுவரும் இவ்வேளையில், திரு. பொன்சேகாவின் அறிவிப்பு ஐ. தே. க. வினருக்கு அதிர்ச்சியை கொடுத்துள்ளது.

தான் உப - சபாநாயகராக பதவி வகிப்பதால், பக்கம் சாராமல் இருக்கவேண்டும் என்றும் நாடாளுமன்றம் கலைக்கப்படும் வரை தான் கட்சிக்காக பிரசாரம் செய்யப்போவதில்லை எனவும் தெரிவித்ததாக கூறப்படுகிறது.

ஐ. தே. பிரசார கூட்டங்களில் கவர்ச்சியும், முக்கிய பங்கும் வகிக்க வேண்டியவரான திரு. காமினி பொன்சேகாவை இந்த தேர்தலில் பிரசாரத்திற்கு பாவிக்காது விட்டாலும், வருகின்ற தேர்தல்களுக்கு பயன்படுத்த ஐ தே. க. தலைமைப்பீடம் உத்தேசித்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (கே-சி)

★ ரொக்கட் தாக்குதலையடுத்து

ராவ் சென்ற விமானம் திசை திருப்பப்பட்டது

(லண்டன்)

இந்தியப் பிரதமர் திரு. நரசிம்மராவ் லண்டன் சென்ற விமானம் ஹீத்துறு விமான நிலையத்தில் தரையிறங்காது லண்டன் ஹட்விக் விமான நிலையத்திற்கு திருப்பிவிடப்பட்டது.

பிரதமர் ராவ் லண்டன் சென்றடைவதற்கு சில மணி நேரங்களுக்கு முன் நேற்றும் 3வது நாளாக லண்டன் ஹீத்துறு விமான நிலையத்தின் மீது ஐரிஷ் கெரில்லாக்கள் ரொக்கட் தாக்குதலை நடத்தியிருந்தனர்.

இதையடுத்து இவ்விமான நிலையம் நோக்கிச் சென்ற ஏயர் இந்தியா விமானம் ஹட்விக் விமான நிலையத்திற்கு திருப்பி விடப்பட்டது. (சி)

தமது மகளை இயக்கத்தில் இணைத்தார் தந்தை

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகள் இயக்கத்தில் தகப்பனார் ஒருவர் தனது மகளை நேற்று முன்தினம் இணைத்துள்ளார்.

நாவாந்துறையில் தற்போது வசித்து வரும் வேலணை மேற்கைச் சேர்ந்த சிவரத்தினம் என்பவரே தனது மகளான சி. கலைச்செல்வி (வயது 21) என்பவரை விடுதலைப் புலிகளிடம் தாயக மண்மீட்புப் போருக்காக ஒப்படைத்தார். -சி

★ தேர்தல் புகார்களை ஆராய

விசாரணைக் குழு மட்டுநகர் விஜயம்

(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாணத்தில் நடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் நடந்துள்ளதாகக் கூறப்படும் புகார்களை ஆராய தேர்தல் திணைக்களத்தின் உயர் மட்ட விசாரணைக்குழு ஒன்று மட்டக்களப்பு சென்றுள்ளது.

புகார்கள் தெரிவிக்கப்பட்ட வாக்குச் சாவடிகளில் கடமையாற்றிய அரசாங்க ஊழியர்களையும் பொலிஸாரையும் இக்குழு விசாரணை செய்துள்ளது.

கிழக்கில் பல பகுதிகளிலும் தேர்தல் மோசடிகள் இடம்பெற்றுள்ளதை பலதரப்பும் சுட்டிக்காட்டியுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (சி)

உரிய காலத்திலேயே

ஜனாதிபதி தேர்தல்

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தல் உரிய காலத்திற்கு முன்னர் நடாத்தப்படமாட்டாது. ஜனாதிபதி தேர்தல் நடாத்தப்படவேண்டிய உரிய காலத்தில் அது நடாத்தப்படும்.

இவ்வாறு அமைச்சர் சிறிசேன கூரே தெரிவித்துள்ளார். ஜனாதிபதி தேர்தல் உரிய காலத்திற்கு முன்னர் நடாத்தப்படும் என செய்திகள் வெளிவந்ததை மறுத்த போதே அவர் இதனை தெரிவித்தார்.

தென்மாகாண சபைத் தேர்தலைப் பொறுத்தே அரசு அடுத்த தேர்தலை நடாத்துமென செய்திகள் வெளிவருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (சி)

பயிலுநர் ஆசிரியராக

2000 பேர் நியமனம்

(கொழும்பு)

இரண்டாயிரம் பயிலுனர் ஆசிரியர்கள் மேலும் தெரிவு செய்யப்படவுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இவர்களுக்கு கல்வி நிலையங்களில் பயிற்சி அளிக்கப்படும். நாட்டின் பாடசாலைகளில் உள்ள ஆசிரியர்களின் பற்றாக்குறையைத் தீர்த்து வைக்கும் திட்டத்தின் கீழ் அரசாங்கம் இந்த நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

தேர்ந்தெடுக்கப்பட்ட பயிலுனர் ஆசிரியர்கள் 3 வருடகாலம் பயிற்சியைப் பெறுவார்கள். இந்தப் பயிற்சி முடிந்தவுடன் அவர்களுக்கு கல்வியில் தேசிய டிப்ளோமா சான்றிதழ்கள் வழங்கப்படும்.

பயிலுனர் ஆசிரியர்கள் அனைவரும் பட்டப் படிப்பை முடிக்கும் வரை சகல விதவசதிகளும் செய்து கொடுக்கப்படும் என்று கல்வி நிர்வாகவியல் பணிப்பாளர் லீலா குணசேகர தெரிவித்துள்ளார். (ம-சி)

புலிகள் பக்கம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

முடியும். அவ்வாறு முன்வருமாறு நான் பகிரங்கமாக அழைப்பு விடுத்துள்ளேன். தற்போது வேறு மாற்றுவழிகள் தென்படவில்லை. அதனால் வடக்கே பாதுகாப்பு படையினர் தமது நடவடிக்கைகளை தொடர்கின்றனர்.

வேறு மாற்று வழி இல்லாத போது இராணுவ நடவடிக்கைகளை தொடரவேண்டி இருக்கிறது என்றார். சி

விஜயதுங்க அரசு ஒருபோது பிரச்னையைத் தீர்க்கப்போவதில்லை

சந்திரிகா கூறுகிறார்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு பிரச்சினையை ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க தலைமையிலான அரசாங்கத்தால் ஒருபோதும் தீர்த்து வைக்கமுடியாது. நாம் பதவிக்கு வந்தால் இப்பிரச்சினைக்கு தீர்வுகாண்போம் என மேல்மாகாண முதலமைச்சர் திருமதி சந்திரிகா விஜயகுமாரணதுங்க தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டை மாவட்டத்தில் உள்ள பதகிரியாவில் நடைபெற்ற தென்மாகாண சபை தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஐ. தே. கட்சியினர் பொய்யாக்குறுதிகளை வழங்கி 1977இல் பதவிக்கு வந்தனர். நாட்டைக் குட்டிச்சுவராக்கியது தான் அவர்கள் செய்த பணியாகும். விலைவாசிகள் மக்களால் தாங்கமுடியாதவாறு கூடிக்கொண்டே போகின்றன என்றார். -த-சி

தேசத் துரோகிக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வந்த அப் பகுதியை சேர்ந்த சத்தியசீலன் மகேந்திரன் (வயது 30) என்பவரே கடந்த 6ம் திகதி மாலை 5 30 மணிக்கு சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.

இந்த மரணதண்டனை உன்னிச்சை முகாமிலிருந்து சுமார் 150 யார் தூரத்தில் நிறைவேற்றப்பட்டது. சி

யுத்தம் என்ற பெயரில் தமிழ் மக்கள் கொலை

(லண்டன்)

"யுத்தம் என்ற பெயரில் இலங்கையில் தமிழ் மக்கள் கொல்லப்படுகின்றார்கள்" என்று தெகிவளையைச் சேர்ந்த லியனகே என்ற இளைஞர் லண்டன் பி. பி. சி. சேவைக்கு அனுப்பிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் அக்கடிதத்தில் மேலும் குறிப்பிடுகையில்; அரசாங்கமும் எதிர்க்கட்சிகளும் பொருளாதார வீழ்ச்சியை மறைப்பதற்காகவே யுத்தத்தை தொடர்ந்து நடத்துகிறார்கள். நான் ஒரு சிங்கள இளைஞன் இருந்தாலும் தமிழ் மக்களுக்கு உரிமைகள் வழங்கப்படவேண்டும் என்பதை ஏற்றுக்கொள்கிறேன். இந்த நாட்டில் தமிழ் மக்கள் வாழ உரிமையுண்டு. இதனை விளங்காது அரசு யுத்தத்தை தொடர்ந்து நடத்துகிறது." என்றார்.

(ஐ-சி)

திரும்பி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டமைப்பு' தெரிவித்துள்ளது.

உலகில் பல நாடுகளையும் உள்ளடக்கியுள்ள இந்த அமைப்பு அடைக்கலம் கோரியுள்ள இலங்கை தமிழர்களை திருப்பி அனுப்புவதற்கு சில மேற்கு நாடுகள் எடுத்துள்ள முடிவையிட்டு கவலையை தெரிவித்துள்ளதுடன் இந்த முடிவை மறுபரிசீலனை செய்யுமாறும் கோரியுள்ளது. (ஐ-சி)

ஈ. பி. டி. பி.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இருந்த வந்த படையினர், ஈ. பி. டி. பி. அலுவலகத்தை சுற்றிவளைத்து அங்கிருந்த அனைவரையும் கைது செய்தனர். பின் மண்டூர் விசேட அதிரடிப் படை முகாமில் வைத்து விசாரணை செய்தபின் அவர்கள் அனைவரையும் காரைதீவு முகாமுக்கு கொண்டுசென்றனர்.

குண்டு வெடிப்பிற்கான காரணம் தெரியவரவில்லை.

ம. சி

சர்வஜன

(1ம் பக்கத் தொடர்ச்சி)

விக்கிரமசிங்கா 'இந்து' பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் கூறியுள்ளார். அப் பேட்டியில் அவர் மேலும் கூறுகையில்:

கிழக்கில் வாழும் தமிழ் பேசும் மக்கள் உள்ளூராட்சித் தேர்தலில் ஐ. தே. கவை நிராகரித்துள்ளார்கள் எனக் கூறுவதற்கு இடமில்லை. கிழக்கிலும் வவுனியாவிலும் இத்தேர்தல் நடாத்தப்பட்டமை ஜனநாயகத்தின் மீதான உறுதியை குறிக்கிறது.

கிழக்கில் புனர்வாழ்வு வேலைகளுடன் தொடர்புடைய சகல அம்சங்களையும் கவனித்து வரும் அரச அம்சங்களுடன் தொடர்புடைய சகல வழிவகைகளையும் ஆராய ஜனாதிபதியின் செயலர் திரு. விஜயதாசாவின் கண்காணிப்பின் கீழ் ஒரு விசேட நடவடிக்கைக் குழு நியமிக்கப்பட உள்ளதாக கூறினார். ஐ

கச்சதீவை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

றுப்பெறுவதை தவிர வேறு வழியில்லை என தி. மு. க. தலைவர் திரு. மு. கருணாநிதி கூறியுள்ளார்.

தமிழக மீனவர்கள் தொடர்ந்தும் இலங்கை கடற்படையால் கொல்லப்படுவதைக் கண்டித்தே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இதேவேளை, இந்திய மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்னைகள் குறித்து இலங்கை அதிகாரிகளிடையே நடைபெற்ற இருநாள் பேச்சுவார்த்தைகள் எந்தவித உறுதியான முடிவுமின்றி முடிவடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. சி

சுவீடனில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

காவலில் வைக்கப்படுவார் என சுவீடிஷ் அரசு இவருக்கு அறிவித்திருந்தது. இதனையடுத்து இம்மாதம் 2ம் திகதி காலை 10 மணியளவில் தனக்குத் தானே இவர் தீமூட்டிக் கொண்டார்.

வீதியில் எரிந்து கொண்டிருந்த இவரைக் கண்ட சுவீடிஷ் பிரஜை ஒருவர் இவரைக் காப்பாற்றி மருத்துவமனையில் சேர்த்ததாகவும் எனினும் இவரது உடலின் 63 வீதப் பகுதி முற்றாக எரிந்துள்ளதாகவும் வைத்திய அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

தொடர்ந்து இரு நாட்கள் முற்றாக மயங்கிய நிலையில் காணப்பட்ட இவரின் உடல் நிலை மிகவும் கவலைக்கிடமாகவே இருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. -ஐ-சி

பலாலி படையினர் அகோர ஷெல் தாக்கு

(யாழ்ப்பாணம்)

பலாலி இராணுவ முகாமில் இருந்து நேற்று அதிகாலை 12-30 மணியளவில் இருந்து 2-00 மணிவரை தொடர்ச்சியாக ஏழாலை வடக்கு, குப்பிளான், புன்னாலைக்கட்டுவன் பகுதிகளை நோக்கி பயங்கர ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

அதிகாலை வேளையாதலால் நித்திரையில் இருந்த மக்கள் பதட்டத்துடன் நித்திரையிலிருந்து விழித்து அவ்வேளையே இடம் பெயர்ந்து அயல் கிராமங்களை நோக்கி ஓடினர். இச்சம்பவத்தின்போது தெய்வாதீனமாக எவரும் காயமடையவில்லை எனினும் பல வீடுகள் பலத்த சேதமடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

தொடர்ந்து நண்பகல் 12 மணியிலிருந்து அச்சுவேலி, பத்தமேனி, புன்னாலைக்கட்டுவன் பகுதியை நோக்கி மீண்டும் ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இடையிடையே சரமாரியான துப்பாக்கி பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டது. சி

கிழக்கில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நாலே கிழக்கின் பாதுகாப்பு பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட இருக்கிறதாம்.

தற்பொழுது கிழக்கில் இடம்பெறும் இராணுவ நடவடிக்கையில் பொலிஸ் அதிரடிப் படைகளும், இராணுவ அதிரடிப் பிரிவினரும் கூட்டாக இணைந்து செயல்படுகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை ஏற்கனவே கிழக்கிலிருந்து இராணுவம் வடக்கு நோக்கி நகரத் தொடங்கிவிட்டதாகவும் இராணுவ வட்டாரங்கள் கூறியுள்ளன. -ஐ-சி

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1994ம் ஆண்டு மார்ச் மாதம் 14-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office Sri Lanka under Licence Number B/10336/B